மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : அது ஆரம்பிக்கப்படுகிறபோது, தக்க திட்டங்களோடு அதற்கான நிதி ஆதாரங்கள் எவ்வளவு தேவைப்படும் என்பதையெல்லாம் கணக்கிலே எடுத்துக்கொள்ளாமல் 'அவசரக் கோலத்தில் அள்ளித் தெளித்தது' என்பதுபோல ஆரம்பத்திலே செய்திருக்கிறார்கள். அதன் விளைவாக அந்த நிறுவனங்களை பின்னாலே நடத்துவதிலே பல சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஒரு குழந்தைக்கு ரூபாய் 50 என்று திட்டமிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு மேலும் இப்போது செலவுகள் வளர்ந்துகொண்டு வருகின்றன. ஆகவேதான் அதைச் செம்மையாகவும், முறையாகவும் நடத்தி, குழந்தைகளை ஒழுங்காகப் பாதுகாக்க வேண்டிய முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. ஆகவே சேர்ந்திருக்கின்ற குழந்தைகளைச் செம்மையாகப் பாதுகாத்து மேலும் அதை வளர்ப்பதிலே அக்கறை செலுத்த வேண்டும் என்று அறநிலையத் துறை விரும்புகிறது.

Funds of Temples and Hindu Religious Trusts

* 164 *Q.*—THIRU K. RAMAMOORTHY: Will the Hon. the Minister for Information and Religious Endowments be pleased to state the total amount of funds drawn from various Temples and Hindu Religious Trusts in the State from the year 1967 up to 30th June 1980, for running Orphanages for Students, Beggar Homes and other Educational and Social Welfare Institutions?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : ஆலயங்கள் மற்றும் சமய நிறுவனங்களால் நடத்தப்படும், பரிவு இல்லங்கள், அன்பு இல்லங்கள், கல்வி நிறுவனங்கள், மருத்துவ மனைகள், குழந்தைகள் காப்பகம், முதியோர் இல்லம் மற்றும் இதர சமூக பணிகளுக்காக 1967 ஆம் ஆண்டு முதல் 30—6—1980 வரை ரூ. 2,43,37,308.19 செலவிடப்பட்டுள்ளது.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏறத்தாழ ரூபாய் 2½ கோடி அளவிலே அறநிலையத் துறையிலேயிருந்து இதற்காக நிதி ஒதுக்கப்பட்டது. அதற்கு ஏற்ற வகையிலே இந்து அறநிலையத் துறையின் நன்கொடைகள் மூலம், அறக்கட்டளைகள் நடத்தப்படுகின்றன. அந்த நிதி மூலம் சமுகநலப் பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன என்பதற்கான விவரங்கள் வெளி உலகிற்குத் தெரிகின்ற அளவிலே முறையாக விளம்பரப் படுத்தப்பட்டிருக்கிறதா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற நிறுவனங்களைப்பற்றி ஆங்காங்கே உள்ள அந்தக் கல்வி நிறுவனங்கள், மற்ற ஆதாவு இல்லங்கள், அன்பு

1981 மார்ச் 25]

இல்லங்கள் இவைகள் எல்லாம் அறநிலையத் துறையின் சார்பிலே நடைபெறு கின்றன என்ற செய்தியைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் முன்பே ஒரு முறை இங்கே பேசுகிறபோது இப்படி ஆலயங்களின் நிதியிலிருந்து நடத்தப்படுகின்றவர்கள் குறித்து ஒரு யோசனை தெரிவித்திருக்கிறார்கள். அந்த நிறுவனங்கள் அந்த ஆலயங்களின் பெய ராலேயே நடத்தப்பட வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அது அறநிலையத்துறையின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே இனிமேல் மொத்தமாக அறநிலையத் துறையாலே நடத்தப்படுகின்ற அது போன்ற நிறுவனங்கள் அனைத்திற்கும் ஒரு பெயரைத் தேர்ந்தெடுத்து அறி வித்தால், அதன் மூலம் மக்கள் மேலும் நல்ல நன்கொடைகளை அளிக்க ஊக்கம் அளிப்பதாக இருக்கும். அந்தக் காரணத்தினாலே, இதைப்பற்றி அரசு தீவிரமாகப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள்.

* 165. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் தொடர்ச்சியாக ஓராண்டுக்கு மேல் பணிபுரிந்த ஆசிரியர்களில் மாணவர்கள் வருகைக் குறைவின் காரணமாக 1979—80 கல்வி ஆண்டில் பணிநீக்கம் செய்யப்பட்டோர், ஒன்றிய வாரியாக எத்தனை பேர்?

(இ) அவர்கட்கு மீண்டும் வேலை வாய்ப்பளிக்கப்பட்டு விட்டதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: ஊராட்சி ஒன்றியங்களிலே, நகராட்சி ஒன்றியங்களிலே விடுப்பு இடங்களிலே ஆசிரியர்கள் பணி அளிக்கப்பட்டு, அவர்கள் அங்கு 5, 6 மாதங்கள் பணியாற்றிய பிறகு. வேலை நீக்கம் செய்யப் படுகின்ற நிலைமைகள் எற்படுகின்றன. அவர்கள் அங்கு காலியிடங்கள் ஏற்படுகின்ற வரையிலே வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அப்படி காலி யிடம் எற்படுகின்றபோதுதான் மீண்டும் அவர்களுக்கு வேலை அளிக்கப்படும் என்று சொல்கிறார்கள். அதிலும், ஒரு முறை ஒரு இடத்தில் வேலை பார்த்துவிட்டு வெளியேறிவிட்டால், அவர்கள் வேலை தேடித்தரும் ஸ்தாபனத்